[27th July 1962

திரு. கே. டி. கோசல்ராம் : இம்மாதிரி கொடுக்கப்படும் பணம் உரிய காலத்தில் செலவழிக்கப்படாமல் விடப்பட்டிருந்தால் அதை வேறு வழியில் பயன்படுத்துவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்கு இப்போது வழியில்லை. ஸ்லம் கிளியரன்ஸ் சம்பந்தப்பட்டவரை முனிசிபாலிட்டியே இதை செய்யலாம். இல்லையென்ருல் ஹௌஸிங் போர்டை கேட்டு அதன்மூலம் இந்த ஸ்கீம் கிளியரன்ஸ் வேலையை மேற்கொள்ளலாம். அப்படிக் கேட்டுக்கொள்ளவில்லையென்ருல் ராஜ்ய சர்க்கார் நேரடியாகச் செய்ய முடியாது.

மொழி சிறுபான்மையினருக்கான அதிகாரி

* 726 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்கம் மொழி சிறுபான்மையினருக்கான அதிகாரி ஒருவரை நியமிக்கும் உத்தேசம் உண்டா ?

(இ) இதன் விபரங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) The Deputy Secretary to Government, Public (Elections) Department, has been designated by Government as the "Linguistic Minorities Officer" in the Secretariat for co-ordinating the work connected with safeguards guaranteed to the linguistic minorities under the Constitution. The Government have also nominated the District Collectors to function as Linguistic Minorities Officers within their jurisdiction.

திரு. டி. கார்ச்சா கவுடர் : எந்தெந்த மொழி பேசுபவர்களை சென்னை மாகாணத்தில் லிங்க்விஸ்டிக் மைனரிட்டியினராக நிர்ணயித்திருக்கிருர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்தெந்த மொழி பேசுபவர்கள் மைனரிட்டியினராக இருக்கிருர்களோ அவர்கள் எல்லாம் லிங்க்விஸ்டிக் மைனரிட்டியினர்தான்.

நூல் நிலையச் சட்டம்

* 727 **கேள்வி.—திரு. ஏ. சுவாமிதாஸ் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாநில நூல் நிலைய சட்டம் கன்னியாகுமரி மாவட்டத்தில் அமுலாக்கப்பட்டுவிட்டதா ?

(இ) இன்றேல், எப்போது அமுல் செய்வதாக உத்தேசம் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) The matter is under consideration.